25th February 1969]

தண்ணீர் தட்டுப்பாட்டால் அந்தப் பகுதியில் விளைவு குறைவாகி விட்டது. அங்குள்ள ஜனத்தொகை எட்டு லட்சம். அத்துடன் அண்மையிலுள்ள கேரளாக்காரர்கள் அங்கே வந்து திருட்டுத்தனமாக வேறு அரிசியைக் கொண்டுபோய்க்கொண்டிருக்கிறார்கள். பத்தாயிரம் ஏக்கர் நிலத்தில் பத்து லட்சம் டன் நெல்லை வைத்துக் கொண்டு எட்டு லட்சம் மக்கள் வாழமுடியுமா என்பதை அமைச்சர் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். தேனி, பெரியகுளம், போடி போன்ற பகுதிகளில் விளைவு குறைந்து பஞ்ச நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அதிகமாக கொடுக்காவிட்டால் அந்த மக்கள் வாழமுடியாது என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் கூறும் கருத்துக்களை முழுக்க முழுக்க நான் அப்படியே ஒத்துக் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இன்று அசெம்பளியில் கூட ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். இன்றைக்கு எல்லா மாவட்டங்களிலும் வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைச் சமாளிக்க ஒன்றரை கோடி வரையில் நிதி ஒதுக்கியிருக்கிறோம். அந்த பயங்கரமான நிலையில் உணவு நிலைமையை எப்படி சமாளிப்பது என்பது தான் பிரச்னை. சர்க்காரின் தானியக் கிடங்குகள் நிரம்பியிருக்கவில்லை. கடந்த ஆண்டு இருந்த நிலைமை இப்போதில்லை. வட ஆற்காடு செங்கல்பட்டு மாவட்டங்கள் வறட்சியாகிவிட்டன. ஆகையால் விலை ஏறாத வகையில் இந்த இயற்கையின் உற்பாதத்தை சமாளிப்பதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் வேண்டியிருக்கிறது. அந்த நம்பிக்கையில் எல்லாம் சரியாக நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Treatment of Cancer

*44 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) the Government Hospitals where facilities exist for the treatment of Cancer;

(b) the Hospitals where Radium treatment is offered; and

(c) whether there exists any new kind of treatment for this?

புற்றுநோய் சிகிச்சை

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புற்றுநோய் சிகிச்சைக்கு அரசாங்க மருத்துவ மனைகளில் எங்கெங்கு வசதிகள் செய்யப்பட்டு உள்ளன?

(இ) ரேடியம் சிகிச்சை எங்கெங்கு செய்யப்படுகிறது?

(உ) புதிய மருந்து வகைகள் ஏதேனும் வந்துள்ளதா?

[25th February 1969

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ), (இ) & (உ) ஒன்று வைக்கப்பட்டுள்ளது. *அவைமுன் விவர அறிக்கை

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்த ரேடியம் சிகிச்சையானது ஐந்து பகுதிகளில் நடைபெறுவதாக இருக்கிறது. அவற்றில் நான்கு சென்னையிலேயே இருக்கின்றன. தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்வ மனை மிகவும் விசேஷமான இடம். அந்த இடத்தில் ரேடியம் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்வதில் அரசாங்கத்திற்கு என்ன கஷ்டம் இருக்கிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பொதுவாக புற்று நோய்க்கு சிகிச்சை செய்வதற்கான நிலையம் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் இருக்கிறது. ரேடியம் சிகிச்சை ஒன்றுதான் தஞ்சையில் இல்லை. சென்னையிலும் புதிதாக சிகிச்சைக்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தஞ்சையைப் பற்றியும் பரிசீலிக்கலாம்.

திரு. எம். எத்திராஜுலு : விவர அறிக்கையில் கண்டபடி இதில் ஏழு மாவட்டங்கள் தான் இருக்கின்றன. மற்ற தென்னூற்காடு, ராமநாதபுரம், திருச்சி, சேலம், வட ஆற்காடு மாவட்டங்களில் புற்று நோய் சிகிச்சை நிலையங்கள் இருப்பதாக இதில் குறிப்பில்லை. அந்த மாவட்டங்களில் புற்றுநோய் சிகிச்சைக்கான மருத்துவ மனைகள் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் அறிந்த வரையில் இந்த புற்றுநோய்க்கான விவரம் குறித்து விசாரணை செய்வதற்குப் போகும்போது அதை விளக்குவதற்கு பலர் வருவதற்குத் தயங்குகிறார்கள் என்றும், அதிகமான பீதியடை கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. அப்படியில்லாமல் அங்காங்குள்ளவர்கள் விசாரணையின்போது அல்லது பரிட்சை செய்யும்போது அந்தப் பகுதிகளில் சிகிச்சைக்கான ஏற்பாடுகளைச் செய்யக்கோரினால் அவற்றைச் செய்ய முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, அமெரிக்காவிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் புதிய மருந்துகள் எல்லாம் எல்லா ஆஸ்பத்திரிகளுக்கும், டாக்டர்களுக்கும் அனுப்பப் பட்டு ஆரம்ப நிலையிலேயே இந்த நோயைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆரம்பத்தில் இந்த மருந்துகள் கொடுக்க முடியுமா இல்லையா என்ற விவரம் இப்போ தில்லை என்றாலும் ஏறக்குறைய எல்லா மருத்துவ மனைக்குமே அவை தரப்படுகின்றன.

---

*Printed as Appendix I on pages 66

25th February 1969]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த கான்சர் நோயைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ஆறு மாதத்திற்கு முன்பு ஜப்பானில் டாக்டர் இச்சிகாவா என்பவரால் பிளியோமைசின் என்ற மருந்து உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அந்த நாட்டில் அதைக் கொடுத்து நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. நமது மறைந்த முதலமைச்சருக்கு வந்த நோய் போன்றவைகளை அது குணப்படுத்துவதாக இருக்கின்றது. இதை நான் மருத்துவ சஞ்சிகையில் பார்த்தேன். பிறகு அதைப்பற்றி அந்த நாட்டு நிபுணருக்கு கடிதம் எழுதினேன். இந்த மருந்து நல்லமுறையில் வேலை செய்வதாக எழுதினர். அந்த மருந்தை தமிழகத்திற்கு அனுப்ப முடியுமா என்று கேட்டு எழுதியிருந்தேன். அதை இந்த அரசாங்கம் யோசித்து உபயோகத்திற்குக் கொண்டுவர ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியில் அவருக்கும் ஒரு மருத்துவ நிபுணருக்கும் ஏற்பட்ட கடிதப் போக்குவரத்துதான் தென் படுகிறது. அரசாங்கத்திற்கு அப்படிப்பட்ட எந்த தகவலும் வரவில்லை. பொதுவாக காஞ்சிபுரத்தில் நார்வேஜியின் அரசாங்க உதவியோடு உலக சுகாதார நிறுவனத்தின் துணைகொண்டு ஒரு பெரிய புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த வேலை நடந்து வருகிறது. அப்போது நல்ல சிகிச்சைக்கான நிலையம் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Automatic Warning Signals at Level-crossings

* 45 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Central Government planned for installing an automatic warning signal at railway level-crossings and asked the State Government to incur the maintenance expenditure; and

(*b*) if so, the reply sent by the Tamil Nadu Government?

இருப்புப்பாதை—சாலைக்கடவுகளுக்கு தானே இயங்கும் எச்சரிக்கை கருவிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ரயில்வே லெவல் கிராஸிங்குகளுக்கு தானே இயங்கும் எச்சரிக்கை கருவிகள் பொருத்த மத்திய அரசு திட்டமிட்டு பராமரிப்புச் செலவை மாநில அரசு ஏற்க வேண்டும் எனக் கேட்டதா ?

(இ) ஆமெனில், தமிழக அரசு அனுப்பிய பதில் என்ன ?